## சுதேச மருத்துவத் துறை அமைச்சு

# இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம்

ஆண்டறிக்கை - 2014

# ஆண்டறிக்கை - 2014

## <u>உள்ளடக்கம்</u>

தலைவரின் செய்தி

| | | | |
|---|---|---|---|
| (1) பணிப்பாளர் சபை அறிக்கை | 01 | - | 13 |
| (2) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 14 | - | 25 |
| (3) கணக்கீட்டுக் கொள்கைகள் | 26 | - | 30 |
| (4) நிதி நிலைமைக் கூற்று | 31 | | |
| (5) விரிவான வருமான கூற்று | 32 | - | 33 |
| (6) பணப்பாய்ச்சல் கூற்று | 34 | | |
| (7) தேறுமதியில் மாற்றங்கள் தொடர்பான கூற்று | 35 | | |
| (8) கணக்குகளுக்கான குறிப்புகள் | 36 | - | 37 |

## தலைவரின் செய்தி

2014 ஆம் ஆண்டில் இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றம் குறித்து இந்த செய்தியை வழங்குவதையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

1969 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம் 45வருட நீண்டதொரு வரலாற்றைக் கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டு மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் என்னை தலைவராக நியமித்தபோது, இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம் ஒரு நட்டத்தில் இயங்கும் நிறுவனமாகவே இருந்தது. என்னுடையவும் எனது ஊழியர் குழாத்தினதும் அயராத உழைப்பு மற்றும் அர்ப்பணத்தின் காரணமாக 2008 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அது இலாபமீட்டும் ஒரு நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது.

மேன்மைதங்கிய ஜனாதிபதயவர்களின் மஹிந்த சிந்தனை எதிர்காலநோக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை கௌரவ அமைச்சர் சாலிந்த திசாநாயக்க அவர்களின் வழிகாட்டலுடனும் எல்லா அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் மாகான சபைகளின் ஊடாக விநியோகத்தை மேற்கொள்ளும் வகையில் நாம் ஆயுர்வேத மருந்துப்பொருட்களை பாரியளவில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தோம்.

தேவைப்படுத்தப்படும் தரத்தில் மூலப்பொருட்களை கொள்வனவுசெய்வதில் நாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டோம். மேலும் 2012 ஆம் ஆண்டு கொள்வனவுசெய்யப்பட்ட சியெஸ்டா காணியில் (Ceyesta land) உள்ள கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்ததன் மூலம் நிறைவுசெய்யப்பட்ட மருந்துப்பொருள்களை களஞ்சியப்படுத்துவதில் நாம் பல காலம் எதிர்கொண்டுவந்த பிரச்சினையை எமக்குத் தீர்க்கக் கூடியதாயிருந்தது.

மூலப்பொருள்களின் உள்நாட்டு கொள்வனவு தொடர்பில், வழமையான மற்றும் வினைத்திறன் மிக்க விநியோக முறைமையை உறுதிசெய்யும் வகையில் விநியோகஸ்தர்களை பதிவுசெய்வதன் மூலம் விநியோக முறைமை பலப்படுத்தப்பட்டுள்ளது.

அளவின் அடிப்படையில் எமது உற்பத்திகளின் விநியோகம் சந்தைத் தேவைக்கு முகம்கொடுக்கக்கூடிய வகையில் போதுமானதாக இல்லை. இது மிகக் குறிப்பாக பயன்பாட்டில் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இயல்திறன் போதாமையாகும். எமது கோரிக்கைக்குப் பதிலாக, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக்காக பொதுத் திறைசேரி ரூ 50 மில்லியன்களை வழங்கியது. புதிய இயந்திரம் மற்றும் கருவிகள் கொள்வனவுக்கான கொள்வனவு செயன்முறை முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

புதிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தியும் உற்பத்திக்குத் தேவையான அரிதான மூலப்பொருள்களை இறக்குமதிசெய்தும் அதிகரித்துவரும் கேள்விக்கு முகம்கொடுக்கும் வகையில் தரமான உற்பத்திகளை வழங்குவதன் ஊடாக ஒரு ஆரோக்கியமான தேசத்தை அபிவிருத்திசெய்யும் அதேநேரம் ஊழியர்களின் நலனோம்புகையை மேம்படுத்தி இந்நிறுவனத்தை இலாபமீட்டும் ஒரு நிறுவனமாக தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்ல முடிந்திருப்பது ஒரு அதிர்ஷ்டமாகும் என நான் நினைக்கிறேன்.

**டீ.டீ.சோமவீர சந்திரசிறி**

**தலைவர்**

**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம்**

## இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அறிக்கை – 2014 ஆம் ஆண்டு

பணிப்பாளர் சபையின் சார்பாக, 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 142வது பிரிவுக்கு அமைய, 2014.12.31ஆம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் குறித்த பணிப்பாளர் சபை அறிக்கையை கௌரவ சுதேச மருத்துவத் துறை அமைச்சருக்கு முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

### (01) அறிமுகம்

1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1969 மே மாதம் 11 ஆம் திகதி 14853/3 ஆம் இலக்க அரசாங்கத்தின் விசேட வர்த்தமானி அறிவிப்பில் அப்போது கைத்தொழில், மீன்பிடித்துறை கௌரவ அமைச்சர் அவர்களினால் இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது.

### (02) தொலைநோக்கு

ஆரோக்கியமிகு சமூகமொன்றைக் கட்டியெழுப்புகையில் ஆயுர்வேத மருத்துவம் சம்பந்தமாக உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக நிலவுகின்ற அவசியப்பாடுகளை உயர்தரம் கொண்டதாக ஈடேற்றுவதோடு, சுதேச மருத்துவத்தின் தனித்துவத்தைப் பாதுகாத்து சேவை வழங்குதலை முதன்மையாகக் கொண்ட முன்னோடியாக மாறுதல்.

### (03) பணிக்கூற்று

உயர்தரம் கொண்ட ஆயுர்வேத மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விநியோகித்தல், அது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், சேவை வழங்குதல் மற்றும் பேணுதல் மூலமாக மக்களின் அவசியப்பாடுகளை ஈடேற்றுவதைப் போன்றே ஊழியர்களினதும் சமூகத்தினதும் நல்வாழ்வுக்காக இயங்கிவருவதோடு, ஆரோக்கியமிகு சமூகமொன்றை உருவாக்கும் பொருட்டு செயலாற்றுதல்

## (04) பிரதான நோக்கங்கள்

1. ஆயுர்வேத ஔடதங்கள், மருந்துகள் மற்றும் ஆயுர்வேத மருந்து வகைகளை உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகப் பணிகளை மேற்கொள்ளல்.
2. சித்தாயுர்வேத மற்றும் யுனானி ஆயுர்வேத ஔடதங்களை (ஔடத மூலப்பொருட்கள் மற்றும் தயாரித்த ஔடதங்கள்) இறக்குமதி செய்தல்.
3. உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற பச்சை ஆயுர்வேத ஔடதங்களை கொள்வனவு செய்தலும் அந்த ஔடதங்களைத் தயாரித்தலும்.
4. ஆயுர்வேத ஔடத உற்பத்தி தொடர்பான மருந்தாக்கல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலும் மேற்படி ஔடதங்களை தரநியமப்படுத்தலும்.
5. ஆயுர்வேத மூலிகைச் செடி செய்கைகளைப் பேணிவருதலும் ஔடத உற்பத்திக்கு அவசியமான உள்ளூர் மூலிகைச் செடியினங்களை உற்பத்தி செய்தலும்.
6. சுத்தமான பசும்பால் பெறும் பொருட்டு பாற்பண்ணைகளை ஏற்படுத்துதலும் அவற்றைப் பேணிவருதலும், ஆயுர்வேத மருந்துவகை தயாரிப்புக்கு அவசியமான சுத்தமான நெய் உற்பத்தி செய்தல்.
7. தேனீ வளர்ப்பினை பேணிவருதலும் ஆயுர்வேத மருந்துப்பொருள் தயாரிப்புக்கு அவசியமான தேன் உற்பத்தி செய்தலும் தேனீ வளர்ப்பினை குடிசைக் கைத்தொழிலாக முன்னேற்றுதல்.

## (05) விற்பனை இடங்கள்

**5.1** **தலைமை அலவலகமும் பிரதான தொழிற்சாலையும்** இல. 94, நாவின்னை வீதி, மஹரகமை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 5.2 விற்பனை நிலையங்கள்

| | |
|---|---|
| விஜேராமை (மருத்துவ சிகிச்சை நிலையத்துடன்) | : இல.22, ஸ்ரீ சோரத மாவத்தை, கங்கொடவிலை, நுகேகொடை. |
| கண்டி (மருத்துவ சிகிச்சை நிலையத்துடன்) | : இல. 70, யடிநுவர வீதி, கண்டி. |
| தியத்தலாவை | : சனானி மந்திரய, தியத்தலாவை. |
| அநுராதபுரம் (மருத்துவ சிகிச்சை நிலையத்துடன்) | : இல. 561/86, பப்லிக் பெயார் வீதி,பஸ்தரிப்பிடம், அநுராதபுரம். |
| பதுளை | :B 35/36,1ஆம் மாடி, மத்திய பஸ் தரிப்பிடம், பதுளை. |
| மிதக்கும் சந்தை | : 178/80, பெஸ்டியான் மாவத்தை, மிதக்கும் சந்தை , கொழும்பு 02. |
| நாவின்னை | : இல. 94, பழைய கொட்டாவை வீதி, நாவின்னை, மஹரகமை. |
| இரத்தினபுரி | : இல. 32, பஸ்தரிப்பிடம், இரத்தினபுரி |
| தங்காலை | : இல.23, கடற் கரை வீதி, தங்காலை |
| பத்தரமுல்லை | : பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை |
| யாழ்ப்பாணம் | : இல.61A,புதிய பொதுச் சந்தை கட்டிடத்தொகுதி, யாழ்ப்பாணம். |
| காலி | : இல. 38, ஓல்கொட் மாவத்தை, (தங்கெதர வீதிய,) காலி |
| செத்சிரிபாய | : செத்சிரிபாய, பத்தரமுல்லை. |
| மொனராகலை | : இல,267,வெல்லவாய வீதி, மொனராகலை |

## (06) பணிப்பாளர் சபை

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டீ.டீ சோமவீர சந்திரசிறி | - | தலைவர் |
| 2. | டாக்டர் சீ.டீ.பீ. சேனாரத்ன | - | முகாமைத்துவப் பணிப்பாளர் |
| 3. | டாக்டர். பீ.ஏ.ரத்னபால | - | உறுப்பினர், பணிப்பாளர் சபை |
| 4. | திரு. டீ.ஜீ. குமாரதுங்க | - | உறுப்பினர், பணிப்பாளர் சபை |
| 5. | திரு.ஜகத் எம் யாபா | - | உறுப்பினர், பணிப்பாளர் சபை |
| 6. | திரு. ஜே.டபிள்யு.கே.பேமரத்ன | - | உறுப்பினர், பணிப்பாளர் சபை |
| 7. | டாக்டர். ஈ.எம்.பீ.பீ..ஏகநாயக | - | உறுப்பினர், பணிப்பாளர் சபை |
| 8. | திரு. ஏ.கே செனவிரத்ன | - | திறைசேரிப் பிரதிநிதி |

## (07) நிறைவேற்று அதிகாரிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர் | - | திரு. டீ.டீ சோமவீர சந்திரசிறி |
| 2. | முகாமைத்துவப் பணிப்பாளர் | - | டாக்டர். சீ.டீ.பீ. சேனாரத்ன |
| 3. | பொது முகாமையாளர் (2013.03.25 – 2014.03.28) | - | திரு. எல்.எச். திலகரத்ன |
| 4. | தொழிற்சாலை முகாமையாளர் | - | திரு. கே.டீ.எம் அர்ஜுன சந்திரசேக்கர |
| 5. | சந்தைப்படுத்தல் முகாமையாளர் | - | திரு. பேர்னாட் காரியவசம் |
| 6. | விநியோக முகாமையாளர் | - | திருமதி. தீபானி வந்நியாராச்சி |
| 7. | மனித வள முகாமையாளர் | - | லங்கா வரகாகொட |
| 8. | நிதி முகாமையாளர் | - | திரு.கெலும் பத்திரவசம் |
| 9. | கணக்காளர் | - | திருமதி. ஏ.டீ.எஸ்.டீ தென்னகோன் |
| 10. | மருத்துவ அதிகாரி (பணிகள் அவாவிய) | - | டாக்டர். பெரகும் ஏகநாயக்க |
| 11. | முகாமையாளர் திட்டமிடல் (பணிகள் அவாவிய) | - | டாக்டர் சோமா நாமசிங்க |
| 12. | உதவி முகாமையாளர் – தரக்கட்டுப்பாடு | - | திரு. ஹேமாந்த கஸ்தூரியாரச்சி |
| 13. | உதவிக் கணக்காளர் - செலவு | - | திரு. வீரவிஜய குணசேக்கர |
| 14. | பணிக்குழாம் உதவியாளர் | - | திரு. லால் ரணசிங்க |
| 15. | கணனி தரவு அதிகாரி | - | திரு. சன்ஜீவ் குமார் |
| 16. | உதவி மருந்தகர் | - | டாக்டர். நில்மினி குணசேக்கர |
| 17. | உதவி மருந்தகர் | - | டாக்டர். தமயன்தி கொடிகார |
| 18. | பிரதம களஞ்சிய காப்பாளர் | - | திரு. சுனில் வல்பொல |
| 19. | பிரதம பாதுகாப்பு அதிகாரி | - | திரு. ரன்ஜித் சேனாரத்ன |
| 20. | சிரேஷ்ட தொழிநுட்ப அதிகாரி | - | திரு. அநுர திலகரத்ன |
| 21. | பிரதம மேம்பாட்டு அதிகாரி | - | திருமதி. கிரிசான்த லியனகே |

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளகக் கணக்காய்வாளர் | - | திரு. யு.ஜயரத்ன |

## (08) ஊழியர் கூட்டமைவு

2014ஆம் ஆண்டில் ஊழியர் கூட்டமைவு

| பதவி | அலுவலகம் | உற்பத்தி | விஜேராம வி.நி | நுவரெலியா வி.நி | கண்டி வி.நி | தியத்தலாவை வி.நி | பதுளை வி.நி | அநுராதபுரம் வி.நி | கோட்டை வி.நி | தங்காலை வி.நி | இரத்தினபுரி வி.நி | மொனராகலை வி.நி | காலி வி.நி | செத்சிறிபாய வி.நி | இருபாய வி.நி | யாழ்ப்பாணம் வி.நி | நுவரெலியா மூலிகைத் தோட்டம் | வேரஹெர வி.நி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| முகாமையாளர்கள் | 04 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 05 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 06 | 08 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 14 |
| முகாமைத்துவஉதவிச் சேவை தொழிநுட்ப அலுவலர்கள் | 02 | 13 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 15 |
| முகாமைத்துவ உதவிச் சேவை தொழிநுட்பம் சாரா அலுவலர்கள் | 32 | 20 | 01 | 01 | 01 | 01 | 01 | - | 01 | 01 | 01 | 01 | - | - | - | 01 | - | 01 | 63 |
| ஆரம்பகட்ட பகுதியளவு திரன்கொண்ட ஊழியர்கள் | - | 08 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 08 |
| ஆரம்ப கட்ட பகுதியளவு திரன்சார் ஊழியர்கள் | - | 10 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 10 |
| ஆரம்பகட்ட பகுதியளவு திரன்சாரா ஊழியர்கள் | 11 | 117 | 03 | 03 | 01 | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | 01 | 02 | 02 | 02 | 01 | 01 | - | 151 |
| ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புசெய்யப்பட்ட ஊழியர்கள் | 01 | 04 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 05 |
| சமயாசமய ஊழியர்கள் /தற்காலிக ஊழியர்கள் | - | 02 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | 03 |
| சமயாசமய பயிற்றப்பட்ட ஊழியர்கள்(வேறு) | 01 | 16 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 17 |
| மொத்தம் | 57 | 199 | 04 | 04 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 02 | 01 | 02 | 291 |

## (09) ஊழியர் ஊக்குவிப்பும் நலனோம்புகையும்

**ஊழியர் ஊக்குவிப்பு**

வினைத்திறனும் பயனுறுதியும் வாய்ந்த சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளுக்கான பணம் மற்றும் வருடாந்த ஊக்குவிப்புச் சம்பளம் என்பவற்றுக்கு மேலதிகமாக வருகைக்கான ஊக்குவிப்புகள், உற்பத்தி ஊக்குவிப்புகள் மற்றும் வினைத்திறன் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.

**ஊழியர் நலனோம்புகை**

உற்பத்தி செயன்முறைகளில நேரடியாக ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கும் விற்பனை நிலையங்களில் உள்ள ஊழியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. எல்லா ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான ஒரு மூன்று நாள் வருடாந்த சுற்றுலாவை கூட்டுத்தாபனம் ஒழுங்குசெய்தது. ஊழியர்களுடன் தொடர்புடைய மரண நிகழ்வுகளின் போது போக்குவரத்து மற்றும் ஏனைய தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் சிங்களப் புத்தாண்டின் போது ரூ 5000/- பெறுமதியான அன்பளிப்புச் சீட்டு வழங்கப்பட்டது.

## (10) மருந்து உற்பத்தி உற்பத்தி அலகுகளில் கீழே தரப்பட்டுள்ளது

| | மருந்துப் பெயர் | அலகு | வருடம்2014 | வருடம்2013 | வருடம்2012 | வருடம்2011 | வருடம்2010 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| 1 | அரிஷ்டம்/வைன் | 750 மி.லீ | 149,196 | 130,960 | 145,552 | 140,351 | 144,356 |
| 2 | ஆசவம் | 750 மி.லீ | 105,860 | 142,933 | 112,948 | 124,483 | 134,150 |
| 3 | கஷாயம் | 750 மி.லீ | 80,247 | 60,393 | 45,945 | 65,506 | 66,606 |
| 4 | சிறப் (பாகு) | 750 மி.லீ | 18,573 | 17,769 | 20,140 | 21,812 | 27,861 |
| 5 | களிம்புகள் | 750 மி.லீ | 171,392 | 163,484 | 139,847 | 147,702 | 135,248 |
| 6 | சூரணங்கள் | கி.கி | 24,942 | 29,225 | 45,945 | 26,092 | 30,318 |
| 7 | கல்கம்/லேஹியம்/ களிம்பு | கி.கி | 18,360 | 22,173 | 19,945 | 18,360 | 22,311 |
| 8 | சுவையூட்டிகள் | கி.கி | 2,505 | 3,122 | 1,417 | 1,618 | 1,702 |
| 9 | வடிகா/குகுல் | கி.கி | 10,166 | 15,233 | 9,651 | 14,422 | 10,212 |
| 10 | **புதிய உற்பத்திகள் 01** | | | | | | |
| | (1) ரணஹங்ச ரசாயனய | கி.கி | - | 139 | 412 | 202 | 160 |
| | (2) திரிபலா மாத்திரைகள் | கி.கி | 988 | 710 | 500 | 1,057 | 506 |
| | (3) மேதஹரனி மாத்திரைகள் | கி.கி | 808 | 457 | 191 | 256 | 159 |
| | (4) மதுரு நருமணங்கள் | கி.கி | - | | | | |
| | (5) சுபேசி | கி.கி | 21 | 11 | 27 | 57 | 29 |
| | (6) மது மேதஹரனி மாத்திரைகள் | கி.கி | - | | | | 3 |
| 11 | **புதிய உற்பத்திகள்** | | | | | | |
| | (1) தம்புன் ஹொதி | 05g. | 226 | 151,893 | 103,680 | 95,000 | 83,600 |
| | தம்புன் ஹொதி | 250g. | - | | 1 | | |
| | (2) பேயாவ | 05g. | 219,784 | 245,785 | 147,313 | 194,000 | 178,600 |
| | பேயாவ | 250g. | 10 | | 1 | | |
| | (3) பஸ்பங்குவ | 50g. | 70,556 | 44,671 | 67,924 | 44,560 | 10,880 |
| | (4) அலோ வெரா ஷெம்பு | 95மி.லீ | 11,802 | 723 | 8,626 | 6,263 | 5,294 |
| | (5) நன்னாரி தூள் | கி.கி | - | | 338 | 33 | - |
| | (6) பெலிகெட மத தூள் | கி.கி | - | | 560 | - | - |
| | **ஏனைய உற்பத்தி வகைகள்** | | | | | - | - |
| | (1) ANTI DIABETIC HERBLE TEA 25 BAGS | பெட்டி | - | | 32 | - | - |
| | (2) HERBLE CURRY SOUP 5g (EXPORT) | 5g | - | | 500 | - | - |
| | (3) MIXE HERBLE TEA 1.5g /06 BAGS (EXPOR | எண் | 3,200 | | 4,320 | - | - |
| | (4) SPICY HERBLE TEA 5g (EXPORT) | 5g | - | | 500 | - | - |
| | (5) PANTA KASAYA 60g | கி.கி | - | | 141 | - | - |

## (11) அரச மற்றும் தனியார் துறைககு விற்பனை செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதி

(ரூ. மில்லியன்களில்)

| | ஆண்டு 2014 | ஆண்டு 2013 | ஆண்டு 2012 | ஆண்டு 2011 | ஆண்டு 2010 | ஆண்டு2009 |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| அரச துறை | 340.45 | 336.49 | 315.98 | 294.76 | 263.9 | 250.71 |
| விற்பனை நிலையம் | | | | | | |
| விஜேராம வெதகெதர | 13.30 | 10.59 | 6.54 | 6.36 | 6.52 | 6.1 |
| நடமாடும் விற்பனைகள் | 0.97 | 0.33 | 0.12 | 0.27 | | 0.32 |
| விற்பனை நிலையம் - கண்டி | 7.96 | 6.22 | 6.53 | 5.37 | 4.86 | 4.93 |
| விற்பனை நிலையம் - தியதலாவ | 5.12 | 3.05 | 3.33 | 1.94 | 3.44 | 2.42 |
| விற்பனை நிலையம - அநுராதபுரம் | 3.81 | 2.00 | 1.85 | 0.98 | 1.15 | 1.42 |
| விற்பனை நிலையம் -பதுளை | 3.27 | 2.94 | 2.65 | 1.77 | 1.63 | 1.49 |
| விற்பனை நிலையம் - புறக்கோட்டை | - | 2.22 | 4.15 | 3.66 | 2.89 | 2.39 |
| விற்பனை நிலையம் - நாவின்னை | 13.82 | 12.86 | 9.78 | 9.28 | 8.14 | 7.81 |
| களஞ்சிய எண் - 008 | 17.34 | 19.86 | 23.54 | 20.38 | 16.48 | 13.66 |
| விற்பனை நிலையம் - இரத்தினபுரி | 18.01 | 12.46 | 9.39 | 4.74 | 3.11 | 1.88 |
| விற்பனை நிலையம் - தங்காலை | 2.84 | 2.09 | 1.25 | 2.17 | 1.10 | 1.07 |
| விற்பனை நிலையம் - பரீட்சை திணைக்களம் | - | 0.98 | 1.02 | 1.01 | 0.75 | 0.60 |
| விற்பனை நிலையம் - யாழ்ப்பாணம் | 4.17 | 4.53 | 2.89 | 2.07 | 1.01 | 0.31 |
| விற்பனை நிலையம் - காலி | 7.93 | 5.58 | 4.65 | 3.68 | 1.04 | |
| விற்பனை நிலையம் - செத்சிரிபாய | 1.71 | 1.67 | 1.20 | 0.21 | | |
| விற்பனை நிலையம் - ஜனகல கேந்தரிய | 0.002 | 0.31 | 0.60 | 0.03 | | |
| விற்பனை நிலையம் - மொனராகலை | 1.42 | 1.27 | 0.74 | | | |
| விற்பனை நிலையம் - பத்தரமுல்லை | 1.17 | | | | | |
| விற்பனை நிலையம் - வேரஹெர | 1.04 | | | | | |
| விற்பனை நிலையம் - மிதக்கும் சந்தை | 0.61 | | | | | |
| | | | | | | |
| **மொத்தத் தொகை** | **444.94** | **425.45** | **396.21** | **358.68** | **316.02** | **295.11** |

**(12) ஒரு சதவிகிதமாக வருமானப் பகிர்வு**

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|---|
| **விற்பனைகள்** | 100.00 | 100.00 | 100.00 | 100.00 | 100.00 | 100.00 |
| **குறைவாக:- விற்பனை செலவுகள்** | 68.52 | 62.46 | 61.81 | 56.13 | 72.30 | 71.69 |
| மொத்த இலாபம் | 31.48 | 37.54 | 38.19 | 43.87 | 27.70 | 28.31 |
| சேர்க்க - ஏனைய வருமானம் | 2.34 | 2.08 | 4.68 | 4.28 | 1.79 | 1.84 |
| | 33.82 | 39.62 | 42.87 | 48.15 | 29.49 | 30.15 |
| **சேர்க்க :-** | | | | | | |
| நிறுவன, நிருவாக செலவுகள் | 18.5 | 18.29 | 19.56 | 21.81 | 19.95 | 20.14 |
| விற்பனை, விநியோக செலவுகள் | 10.91 | 11.65 | 9.03 | 8.60 | 6.77 | 5.78 |
| நிதி சார்ந்த செலவுகள் | 1.98 | 0.64 | 0.01 | 0.10 | 1.28 | 0.26 |
| ஏனைய செலவுகள் | - | - | 0.62 | - | - | - |
| **மொத்த செலவுகள்** | 31.39 | 30.58 | 29.22 | 30.51 | 28.00 | 26.18 |
| **செயற்பாடுசார்ந்த இலாபம்/நட்டம்** | 2.43 | 9.04 | 13.65 | 17.64 | 1.49 | 3.97 |
| சேர்க்க-வட்டி வருமானம், செயற்பாடுசாரா வ | 1.23 | 1.31 | 3.75 | 0.55 | 0.43 | 0.01 |
| வரிக்கு முந்திய இலாபம் | 3.66 | 10.35 | 17.40 | 18.19 | 1.92 | 3.98 |
| <u>**குறைக்க:**</u> | | | | | | |
| நிகவரெடடிய மூலிகைத்தோட்டம் (நட்டம்) | 0.4 | 0.43 | 0.45 | 0.37 | 0.02 | - |
| <u>**குறைக்க:**</u> | | | | | | |
| வரிக்கான ஏற்பாடுகள் | 1.46 | 2.65 | 4.74 | 5.16 | 0.38 | 0.80 |
| **நிகர இலாபம்** | **1.80** | **7.27** | **12.21** | **12.66** | **1.52** | **3.18** |

**(13) இலாபம் (ரூ. மில்லியன்களில்)**

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனைகள் | 444.94 | 425.45 | 396.22 | 358.68 | 316.02 | 295.12 |
| குறைக்க:- விற்பனை செலவுகள் | 304.89 | 265.72 | 244.90 | 201.33 | 228.48 | 211.58 |
| மொத்த இலாபம் | 140.05 | 159.73 | 151.32 | 157.35 | 87.54 | 83.54 |
| சேர்க்க - ஏனைய வருமானம் | 9.39 | 8.85 | 18.55 | 15.34 | 5.64 | 5.43 |
| மொத்த வருமானம் | 149.44 | 168.58 | 169.87 | 172.69 | 93.18 | 88.97 |
| **குறைக்க :-** | | | | | | |
| நிறுவன, நிருவாக செலவுகள் | 82.3 | 77.82 | 77.55 | 78.23 | 63.04 | 59.43 |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | 48.55 | 49.56 | 35.80 | 30.86 | 21.39 | 17.07 |
| நிதிசார்ந்த செலவுகள் | 8.81 | 9.48 | 0.07 | 0.37 | 4.03 | 0.76 |
| ஏனைய செலவுகள் | - | - | 2.49 | - | - | - |
| **மொத்த செலவு** | 139.66 | 136.86 | 115.91 | 109.46 | 88.46 | 77.26 |
| **செயற்பாட்டு இலாபம்** | 9.78 | 31.72 | 53.96 | 63.23 | 4.72 | 11.71 |
| சேர்க்க - வட்டி வருமானம் | 5.46 | 6.78 | 1.45 | 0.83 | 0.57 | 0.02 |
| செயற்பாடற்ற வருமானம் | 1.01 | 5.59 | 13.44 | 1.15 | 0.72 | 11.73 |
| நிகவரெடிய மூலிகைத் தோட்டம் (நட்டம்) | (1.78) | (1.83) | (1.79) | (1.33) | 0.00 | 0.00 |
| வரிவிதிப்புக்கான ஏற்பாடு | (6.51) | (11.28) | (18.78) | (18.52) | 1.20 | 2.34 |
| **நிகர இலாபம்/(நட்டம்)** | **7.96** | **30.98** | **48.30** | **45.36** | **4.81** | **9.38** |

## (14) மருந்துப் பொருள் உற்பத்திக்கான மூலப்பொருள் கொள்வனவில் உள்ள பிரச்சினைகள்

மருந்துப்பொருள் உற்பத்திக்குத் தேவையான பெரும்பாலான மூலப்பொருள்கள் உள்ளூர் விநியோகஸ்தர்களிடமிருந்தே கொள்வனவு செய்யப்படுகிறது என்பதோடு, அவர்கள் அவற்றை இயற்கைக் காடுகளில் இருந்தே சேகரிக்கின்றனர். காடுகள் பாதுகாப்பு ஒழுங்குகளுக்கு ஏற்ப, மூலப்பொருள்கள் விநியோகம் கடினமான ஒன்றாக மாறியுள்ளதோடு, கூட்டுத்தாபனம் அதற்காக அதிக விலையை செலுத்தவேண்டியும் உள்ளது. கூட்டுத்தாபனத்தின் விநியோகத்துடன் தொடர்புடைய சட்டதிட்டங்கள் குறித்து இலங்கை பொலிஸ் மற்றும் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## (15) கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி மற்றும் களஞ்சிய வசதிகளை விரிவாக்குதல்

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கேள்விக்கு ஏற்ப தரத்திலும் அளவிலும் விநியோகத்தை மேற்கொள்வதற்கு 40 வருடங்கள் பழைமைவாய்ந்த உற்பத்தி முறைமைகள் போதுமானதாக இல்லை. நவீன உலகின் தேவைக்கு முகம்கொடுக்கக்கூடிய வகையில் புதிய தொழிநுட்பத்துடன் கூடிய இயந்திரங்களைக் கொள்வனவுசெய்வதற்கான கொள்வனவு நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைக்கான நிறைவான மருந்துப்பொருள்களை விநியோகிப்பதற்கான இயல்திறனை அதிகரிப்பதே எமது நோக்கமாகும். மேலும், எமக்கு இத்தொழிற்துறையில் உள்ள தனியார் நிறுவனங்களின் போட்டித்தன்மைக்கும் வெற்றிகரமாக முகம்கொடுக்க முடியுமாயிருக்கும். முழு நிறைவான மருந்துகள் பொதுத் திறைசேரி மற்றும் ஒரு வங்கிக் கடனைப் பயன்படுத்தி நாம் 2012 இல் கொள்வனவு செய்த சியஸ்டா (Ceyesta) காணியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன், புதிய இயந்திரங்களையும் அக்காணியிலே பொருத்துவற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## (16) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைத்தல்

இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம் 2014 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 06 கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் முன்வைக்கப்பட்ட கேள்விகள் கலந்துரையாடப்பட்டு தேவையான சரிப்படுத்தல்களுக்காக பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கணக்காய்வு, முகாமைத்துவக் குழுக் கூட்டம் காலாண்டு அடிப்படையில் சுதேச மருத்துவத் துறை அமைச்சின் செயலாளரின் தலைமையில் நடைபெறுவதுடன், கணக்காய்வு கேள்விகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றங்கள் மீளாய்வுசெய்யப்படுகிறது.

2014 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் சபை உறுப்பினர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திரு. ஏ.கே சேனவிரத்ன | - திறைசேரி பிரதிநிதி | - தலைவர் |
| திரு. டி.ஜீ. குமாரதுங்க | - பணிப்பாளர் சபை உறுப்பினர் | - குழு உறுப்பினர் |
| திரு. ஜெகத் எம். யாப்பா | - பணிப்பாளர் சபை உறுப்பினர் | - குழு உறுப்பினர் |
| திரு. ஜே.டபிள்யு.கே. பிரேமரத்ன | - பணிப்பாளர் சபை உறுப்பினர் | - குழு உறுப்பினர் |
| திருமதி. டபிள்யு.ஏ.சீ.எஸ். பிரியதர்ஷனி | - சுதேச மருத்துவத்துறை அமைச்சின் சார்பில் | - குழு உறுப்பினர் |
| திருமதி, எஸ்.ஏ.டீ.என். பெரேரா | - கணக்காய்வு கண்காணிப்பாளர் சார்பில் | - குழு உறுப்பினர் |
| திரு. யு. ஜயரத்ன | - உள்ளகக் கணக்காய்வாளர் | - வசதிப்படுத்துனர்/ குழுவின் செயலாளர் |

## (17) நிதி முகாமைத்துவமும் கணக்காய்வுக் கேள்விகளும்

கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு முறைமையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் மற்றும் போதாமைகள் குறித்து கணக்காய்வாளர் நாயகம் அவ்வப்போது சுட்டிக்காட்டிவருகின்றார். மேலும் அதே குறைபாடுகள் பாராளுமன்ற பொதுக் குழுவினாலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததோடு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு வழங்கியுள்ள அறிவுறுத்தல்கள், வழிகாட்டலின் அடிப்படையிலும் பணிப்பாளர் சபையின் பணிப்புரைகளுக்கு ஏற்பவும் அக்குறைபாடுகள் மற்றும் போதாமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

நன்றி.

பணிப்பாளர் சபையின் சார்பாக பின்வருவோர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

- கௌரவ சாலிந்த திசாநாயக, சுதேச மருத்துவத்துறை அமைச்சர் மற்றும் செயலாளர் திருமதி வீ.பீ.பீ.கே வீரசிங்க மற்றும் ஊழியர்கள்.
- கூட்டுத்தானத்தின் வருமானத்தையும் மூலதனத்தையும் முன்னேற்றுவதற்கு உதவிய பொதுத் திறைசேரி.
- தமது ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் தந்துதவிய ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதன் ஊழியர்கள், ஆயுர்வேத ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் ஊழியர்கள்.
- எமது உற்பத்திகளை கொள்வனவு செய்வதில் உதவிய மாகாண சபைகள், உள்ளுராட்சி அதிகாரசபைகள், பிரதேச சபைகள் மற்றும் விற்பனை பிரதிநிதிகள்.
- எமது முறைமையில் உள்ள குறைபாடுகள் மற்றும் போதாமைகளை சரிசெய்துகொள்வதற்கு எமக்கு வழிகாட்டிய கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அவரது ஊழியர்கள்
- மீளாய்வு ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாராட்டத்தக்க பங்களிப்புகளை வழங்கிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள்.

**(டீ.டீ. சோமவீர சந்திரசிறி)**

**தலைவர்**

**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம**

| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | எச்எஸ்எம்/சீ/ஏடீசீ/1/14/32 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2016 ஜுன் 18 |
|---|---|---|---|---|---|

தலைவர்,

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுன்ன ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2016 ஜனவரி 29 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக்கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்பட்டதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான ரூபா 97,128,534 பெறுமதியான சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் கூட்டுத்தாபன நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தபோதும், சொத்துக்களை

மீள மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20

2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 129,038,210 அரசாங்க மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை இனங்கண்டு காலக் கழிவுக்கான செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் பணிக்கொடையைக் கணிப்பதில் நிலவிய தவறு காரணமாக பணிக்கொடையின் பொருட்டு ரூபா 269,372 கூடுதலாக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 14 விற்பனை நிலையங்களின் கையிருப்பாகிய ரூபா 15,715,396 கிரயம் கணக்கிலிடப்படாதிருந்தது.

(இ) உற்பத்தி நடவடிக்கைகளில் தொடர்பற்ற கட்டிடத் தேய்மானமாகிய ரூபா 934,971 உற்பத்தி மேந்தலைச் செலவினமாக கணக்கிலிடப்பட்டமையால் அதேயளவு தொகையால் ஆண்டினது உற்பத்திக் கிரயம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த 2 அரைக்கும் இயந்திரங்களுக்கான நிறுத்தி வைத்த ரூபா 236,861 கணக்கிலிடப்படவில்லை.

### 2.2.3 விபரிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்கின் பெயர் | பேரேட்டின் பிரகாரம் மீதி | பட்டோலை/மீதியை உறுப்படுத்தும் சான்றிதழ் பிரகாரம் மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **ஊழியர்கடன்** | | | |
| 2014/01/01 இல் உள்ளவாறான மீதி | 17,959,786 | 16,994,098 | 965,688 |
| ஆண்டின் போதிலான கடன் கொடுப்பனவு | 12,437,834 | 12,621,963 | 184,129 |
| ஆண்டின்போது அறவிடப்பட்ட கடன் | 13,009,338 | 12,245,510 | 763,828 |
| இலங்கை வங்கி கேள்வி வைப்பு | 12,176,712 | 12,086,301 | 90,411 |
| இலங்கை வங்கி நிலையான வைப்பு | 1,630,151 | 1,708,914 | 78,763 |

### 2.2.4 பெற வேண்டிய கணக்குகள்

2010 ஆம் ஆண்டில் பெறவேண்டிய வருவாயாகக் கணக்கிலிடப்பட்ட ரூபா 750,797 ஐ மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிட இயலாதிருந்தது.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 166,665,142 மொத்தப் பெறுமதியுடைய சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவு | மிகையூதியக் கொடுப்பனவிற்காக வருடாந்தக் கணக்குகள் குறித்த தினத்திலோ அல்லது அதற்கு முன்னரோ கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டிற்கான கணக்குகள் 2015 நவம்பர் 20 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் 2014 திசெம்பர் 23 ஆந் தகிதியன்று ரூபா 3,423,640 மிகையூதியமாகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 14,474,024 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 42,255,668 ஆகியமையால் மீளாய்வாண்டினது மிகை ரூபா 27,781,644 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய வருமானம் ரூபா 3,989,587 இனால் குறைவடைந்தமை மற்றும் ஆண்டிற்கான இறுதிக் கையிருப்பு ரூபா 15,715,396 இனால் குறைவாகக் கணக்கிலிடப்பட்டமை மற்றும் நிதிச் செலவுகள் ரூபா 645,336 அதிகரிப்புக்குள்ளானமை என்பன இதற்கான காரணமாக அமைந்தன.

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது மீளாய்வு செய்யப்பட்ட வருடாந்த உற்பத்தித் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருந்த வருடாந்த ஔடத உற்பத்திப் பெறுமதி ரூபா 423,866,006 ஆகியபோதும், உள்ளவாறான வருடாந்த உற்பத்திப் பெறுமதி ரூபா

268,987,152 ஆகியமையால் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த உற்பத்தி ரூபா 154,878,854 அல்லது 36.5 சதவீதத்தால் குறைந்திருந்தது. யதார்த்தபூர்வமாக திட்டமிடப்படாமை, தேவையான பச்சை மருந்தும் உலர்ந்த மருந்துகளினதும் வழங்கலுக்காகப் பொருத்தமான மற்றும் போதிய நடைமுறைகளை இனங்கண்டு உற்பத்தி நடைமுறைகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை என்பன இதற்கான காரணமாக அமைந்தன.

(ஆ) திட்டமிடப்பட்ட மருந்து விற்பனைப் பெறுமதியை உள்ளவாறான விற்பனைப் பெறுமதியுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அரச துறை வருமானம் முறையே 27 சதவீதம் மற்றும் 15 சதவீதம் வரை எய்தப் பெறமுடியாதவாறிருந்தன. தனியார் துறை வருமானம் முன்னைய ஆண்டில் திட்டமிடப்பட்ட வருமானத்திலும் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதும், மீளாய்வாண்டின்போது 33 சதவீத வருமானம் எய்தப்பெற முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதுடில்லியில் உள்ள உலக சுகாதார ஸ்தாபன அலுவலகத்தில் உள்நாட்டு வைத்திய நடவடிக்கைகளுக்காக அலுவலகம் ஒன்றைப் பெற்று அதன் பழுதுபார்த்தல் மற்றும் உபகரணக் கொள்வனவு என்பவற்றிற்கு 2012 ஒக்டோபர் 15 ஆந் திகதியன்று வெளிவிவகார அமைச்சிற்கு ரூபா 3,000,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. 2 ஆண்டுகளாகிவிட்டபோதும், குறித்த பணிகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் கைப்பற்றல், பழுதுபார்த்தல் அலுவலக உபகரணக் கொள்வனவு என்பன தொடர்பான தொடர் நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச வங்கி ஒன்றில் உள்ள நடைமுறைக் கணக்கொன்றில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்த்து வைக்கப்படாதிருக்கும் ரூபா 337,010 தொகையான வைப்புகள் காணப்பட்டது. அதில் ரூபா 22,450 வைப்பிலிடப்பட்டுத் தேறாதிருக்கும் தொகையாகவும், ரூபா 16,633 தொகையானது 1988 மற்றும் 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியின்போது வங்கியிலிடப்படாத தொகையாகவும் ரூபா 297,927 முன்பிருந்தே வரும் வேறுபாடுகள் ஆகவும் இனங்காணப்பட்டிருந்தன. இவ்வாறான நிலையில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், அவற்றுடன்

தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனத் தெரிகின்றது.

(இ) 2014 ஜனவரி 25 ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப் பெற்ற ரூபா 2,917,801 கிரயமுடைய 2 அரைக்கும் இயந்திரங்களைப் பொருத்துவதற்குத் தேவையான மேடை அமைக்கப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை 2 இயந்திரங்களும் பயன்படுத்தப்படாதிருந்தன. இவ்விரண்டு இயந்திரங்களும் 2015 மார்ச் தொடக்கம் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும், அத் தினம் வகையில் அதன் 02 ஆண்டு உத்தரவாத காலம் முடிவடைந்து 13 மாதங்களாகியிருந்தன.

(ஈ) அரைக்கும் இயந்திரங்களது யோக்கியதையைப் பரிசீலிக்காது உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 92,430 கிரயமுடைய 163,300 கிலோ கிராம் எடையுடைய தெசதுன் கல்கவில் சிறிய உலோகத் துண்டுகள் கலந்திருந்தமையால் அவை விற்பனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(உ) கூட்டுத்தாபனத்தால் உரிமை கோரப்படும் காணி ஒன்றில் 2009 ஆம் ஆண்டில் ரூபா 1,808,795 செலவில் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டிருந்ததுடன் உற்பத்தியகம் ஒன்றை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட இக்காணியினது சட்டபூர்வ உரித்தைச் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டு டிசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஊ) 2009 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாதுள்ள செலவு மீதியாகிய ரூபா 38,613,358 இனங்காணப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக ஒதுக்கமாகக் காண்பிக்கப்பட்டவாறிருந்தது.

**4.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கோட்டை புகையிரத நிலையம் செத்சிரிபாய விற்பனை நிலையம் ஆகிய 02 இலும் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 623,093 ஆகும்.

(ஆ) தேங்காய் எண்ணெயில் உள்ள திரவத்தின் அளவு குறித்த அளவில் இல்லாததால் நிலைமைக் கட்டுப்பாட்டு முகாமையாளரால் ஏற்க மறுக்கப்பட்டிருந்தபோதும் 2,000 கிலோகிராம் தேங்காய் எண்ணெய் ரூபா 476,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) முறையான உடன்படிக்கையில் ஈடுபடாது ஆரம்பக் கொடுப்பனவாகிய ரூபா 950,000 இன் அரைப்பங்கான ரூபா 475,000 கொடுப்பனவு செய்யப்பட்டு புறக்கோட்டையில் மிதக்கும் வர்த்தகக் கூட்டுத்தொகுதியில் விற்பனைக் கூடம் வாடகைக்குப் பெறப்பட்டு 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி விற்பனைக் கூடம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,481 இலாபம் ஈட்டப்பட்டிருந்தபோதும், பணிப்பாளர் சபையினது அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனத்தின் தலைவரால் விற்பனைக் கூடம் இலாபமீட்டாத விற்பனைப் கூடமாகக் கருதப்பட்டு 2015 பெப்ரவரியில் மூடப்பட்டிருந்தது.

(ஈ) பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி கல்வி அமைச்சின் அலுவலக சுற்றாடலில் 2013 ஏப்ரல் மாதத்தில் திறந்து வைக்கப்பட்ட கூட்டுத்தாபன விற்பனை நிலையத்தில் 8 மாதங்களின்போது ரூபா 277,132 நட்டம் ஏற்பட்டிருந்ததது. மீளாய்வாண்டின் போது ரூபா 270,221 இலாபம் ஏற்பட்டிருந்தபோதும், விற்பனை வருவாயை அதிகரிப்பதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது 2015 ஜுன் 17 தொடக்கம் இவ்விற்பனைக் கூடத்தை மூடியதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு ஆண்டிலும் வருடாந்தப் இருப்பு கணிப்பு மூலம் இனங்காணப்பட்டிருந்த ரூபா 9,782,418 மிகைக் கையிருப்பைப் புத்தகங்களில் சேர்த்துக் கொள்வதற்கும் கையிருப்புக் குறைவாகிய ரூபா 6,616,750 தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 இன் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் முயலவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின்போது உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட 10 வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்படவில்லை. உற்பத்தி செய்யப்படாமைக்கான காரணம் மற்றும் அதன் காரணமாக கூட்டுத்தாபனம் இழப்பிற்குள்ளான வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது சுறாவிதுரவடி, ஜீவானந்தவடி, புத்தராஜகல்கய, வெள்ளை வெங்காய லேகியம், ரணஹங்ச சாயனய, மாக்கவிதுரங்க, பதிராரிஷ்டம், மஹாசங்கவடி, சர்ப்பகன்டவடி, ஹிங்குவாஸ்தகசூரணம், வாசக சிரப், சொமனாதரச எனும் 12 வகை மருந்துகள் என்பவற்றிற்குப் பெறப்பட்ட கட்டளைகளுக்கு அவற்றை வழங்க இயலாது போனமையால் ஏற்பட்ட வருமான இழப்பு ரூபா 137,154,983 ஆகும்.

### 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சியெஸ்டா களஞ்சியக் கூட்டுத்தொகுதியில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உற்பத்தி முடிவடைந்த மருந்துக் களஞ்சியத்தில் கழிவுப்பொருட்கள் போத்தல்களது பாகங்கள், நிலையங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த பொருத்துவதற்குப் பயன்படும் பொருட்கள், 2 அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் ரூபா 156,000 பெறுமதியான 4 தாங்கிகள் என்பன களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பெறுமதி கணிப்பிடப்பட முடியாத மோட்டார் சைக்கிள் ஒன்று பாவனை இல்லாது களஞ்சியக் கூட்டுத்தொகுதியில் இருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஊக்குவிப்பு படி வழங்கப்படுகையில் அதற்கான அங்கீகாரம் திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டுமென 2007 நவம்பர் 09 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழு கட்டளையிட்டிருந்தபோதும், 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின்போதும் முன்னைய மூன்று ஆண்டுகளின்போதும் ஊக்குவிப் படியாக ரூபா 167,552,388 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது மோட்டார் வாகனம் ஒன்று விபத்திற்குள்ளாகியிமையால் ரூபா 780,558 இழப்பு ஏற்பட்டிருந்தது. மொத்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் வாகனங்கள் காப்புறுதி செய்திருக்கப்படாமையால் ரூபா 405,287 காப்புறுதிக்கு உட்படாதிருந்தது. இவ்விபத்து சம்பந்தமாக நிதிப்பிரமாணங்கள் 102 மற்றும் 104 என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் பொலிசினால் ஒப்படைக்கப்பட்ட 218.322 கிலோ கிராம் கஞ்சா மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் கூட்டுத்தாபனத்திற்கு எடுத்தவரப்படும்போது அதில் 15.472 கிலோகிறாம் தொலைந்து போயிற்று. இந்த மோசடி நிகழ்ந்து ஏறக்குறைய மூன்று ஆண்டுகளாகியபோதும், ஆரம்ப விசாரணைகள் மாத்திரமே நடைபெற்றிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) காலி விற்பனை நிலையத்தில் இராக்கை ஒன்று உடைந்து வீழ்ந்தமையால் ரூபா 141,895 பெறுமதியான மருந்துகள் அழிவடைந்திருந்தன.

(ஈ) உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 169,080 பெறுமதியான 600 லீட்டர் மதுாகா பாணி ஊழியர்களின் கவனமின்மை காரணமாகவும், ரூபா 1,513,456 பெறுமதியான உலர்ந்த திராட்சை 2,230 கிலோ கிராம் புகையூட்டப்படாமையாலும் ரூபா 111,785 பெறுமதியான மருந்துகள் பழுதடைந்து பாவனைக்குப் பொருந்தாததாக அழிவடைந்திருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளது வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 08 மாதங்கள் 20 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2015 நவெம்பர் 20 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதிக்கெனத் தயாரிக்கப்பட்ட புதிய கூட்டிணைந்த திட்டத்தினூடாக இனங்காணப்பட்டிருந்த நெடுங்காலப் பணிகளை நிறைவேற்ற இயலுமானவாறு மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும்,

மீளாய்வாண்டின்போது மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 09 செயற்திட்டங்களில் 07 நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா 423,866,006 ஆகும். உள்ளவாறான உற்பத்திக் கிரயம் ரூபா 268,911,820 ஆகும். மீளாய்வாண்டின்போது அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட 10 புதிய உற்பத்தி வகைகள் 96 சதவீதமும் ஏனைய 07 வகை உற்பத்திகள் 52 முதல் 72 சதவீதம் வரையிலும் எய்தப்பெற முடியாதிருந்ததுடன் அவற்றிற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவுமில்லை.

## 5.3 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

கூட்டுத்தாபனத்தின் 2013 ஆம் ஆண்டினது வருடாந்த அறிக்கை 2016 ஜனவரி 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டு இதுவரை திருத்தப்படுவதற்கான போதிய கவனம் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) தேவைகளை இனங்காணாது 2011 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட போத்தல்கள் மற்றும் மூடிகளில் 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 989,603 பெறுமதியான 24,002 வைன் போத்தல்களும் ரூபா 623,000 பெறுமதியான 28,000 மூடிகளும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன.

(ஆ) ஆய்வு கூட அறிக்கை மற்றும் மருத்துவக் குழு அறிக்கை மூலம் நிராகரிக்கப்பட்டிருக்கையில் ரூபா 1,980,000 பெறுமதியான 4,000 கிலோ கிராம் தேன் 2012 ஜுன் மாதத்தில் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இக்கொள்வனவுகள் தொடர்பான உறுதிச்சீட்டுக்கள் பற்றுச்சீட்டுக்கள், குறித்த கோவைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவுமில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தில் ரூபா 5,930,284 செலவில் உற்பத்தி செய்யப்படக் கூடியதாகவிருந்த 200 கிலோகிறாம் அக்ரஹ ஹஸ்ம மற்றும் நாகஹஸ்ம ரூபா 7,137,130 செலவில் இறக்குமதி செய்யப்பட்டமையால் ரூபா 1,206,846 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபன லீவு விதிக்கோவையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் நியமனம் பெற்ற முதலாவது ஆண்டில் மருத்துவ லீவுக்கு உரித்து இல்லாதபோதும், உத்தியோகத்தர்களதும் ஊழியர்களதும் முதலாம் ஆண்டில் எஞ்சிய மருத்துவ லீவின் பொருட்டு 2009 முதல் 2013 வரை ரூபா 15,064,122 கூட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஊழியர்களது கவனமின்மை காரணமாக 01283115 ஆம் இலக்க வேலைப் பத்திரத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 233,400 பெறுமதியான மதுரகா பாணி அழிவடைந்திருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கையிருப்புக் கட்டுப்பாடு
(ஆ) விற்பனைக் கட்டுப்பாடு
(இ) கொள்வனவு நடைமுறைகள்

ஒப்பம் : எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## தயாரிக்கும் அடிப்படையும் கணக்கீட்டுக் கொள்கையும் - 2014

**1. இணக்கப்பாட்டுக் கூற்று**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் உட்பட விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று, நியாயத் தன்மையிலுள்ள மாற்றங்கள் பற்றிய கூற்று, பணப் பாய்ச்சல் பற்றிய கூற்று ஆகியவற்றை உள்ளடக்குகின்ற நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் (இல.ப.க.நி.), இலங்கை அரசாங்கம் உருவாக்கிய நிதி ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தப்பட்ட புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க (SLFRS / LKAS) தயாரிக்கப்பட்டுள்ளன.

2015 நவம்பர் 09ஆந் திகதி நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**2. அளவீட்டு அடிப்படை**

நிதி நிலைக் கூற்றிலுள்ள பின்வரும் சடப் பொருட்களுக்காக அன்றி வரலாற்றுச் செலவு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(அ) LKAS 19 யில் விபரிக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட அலகு மதிப்பு முறைமையினை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட அனுகூலக் கடமைகள் அதன் தற்போதைய பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன.

(ஆ) நியாயமான பெறுமானத்தில் அளவிடப்பட்ட பிரதியெடுக்கப்படாத நிதி உபகரணங்கள்

நிதிக் கூற்றுக்களிலே பணவீக்க விடயங்களுக்காக எந்தவிதமான சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. இலாபகரமான கரிசனை**

பணிப்பாளர் சபை எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திலே இலாபகரமான கரிசனையாகத் தொடரக்கூடியதாக SLADC யின் ஆற்றலை மதிப்பிட்டுள்ளது; அத்துடன், கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளைத் திரவமாக்க அல்லது இடைநிறுத்தவேண்டிய தேவையினை அவர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள்.

**4. ஒப்பீட்டுத் தகவல்**

சிறப்பாகச் சமர்ப்பிக்கவும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடக்கூடியவாறும் முன்னைய ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களினது சமர்ப்பணம் மற்றும் வகைப்படுத்தல் ஆகியன திருத்தப்பட்டன.

**5. மதிப்பீடுகளையும் தீர்மானங்களையும் பயன்படுத்தல்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க (SLFRS/LKAS) நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றபோது கணக்கீட்டுக் கொள்கைப் பிரயோகம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவு ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட அளவுகள் என்பனவற்றைப் பாதிக்கக்கூடிய தீர்ப்புக்கள், மதிப்பீடுகள், ஊகங்கள் என்பனவற்றை முகாமைத்துவம் செய்யவேண்டிய தேவையுள்ளது.
தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பன சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக நம்பப்படுகின்ற எதிர்பார்ப்புக்கள் உட்பட வரலாற்று அனுபவம், போக்குகள் மற்றும் ஏனைய விடயங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டன. அதற்கிணங்க, உண்மையான முடிவுகள் இத்தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள், அடிப்படையான ஊகங்கள் ஆகியவற்றின் செல்லுபடியாகும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அவைகள் நடைபெற்றுவரும் அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் மீளாய்வுசெய்யப்படுகின்ற காலப்பகுதியிலும் பாதிக்கப்படுகின்ற எதிர்கால காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதிலுள்ள சங்கடமான தீர்ப்புக்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பானவைகளாகும்.

வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் பற்றிய அளவீடு
பின்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் / பொறுப்புக்கள்

**6. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்**

**(அ) தொழிற்பாட்டு, சமர்ப்பண நாணயம்**

பொருள் செயற்படுகின்ற (தொழிற்பாட்டு நாணயம்) ஆரம்ப பொருளியல் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனங்களின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் அளவிடப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பண நாணயமான இலங்கை ரூபாக்களில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

**(ஆ) கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும்**

கொடுக்கல்வாங்கல் திகதிகளில் நிலவுகின்ற நாணயமாற்று வீதங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் தொழிற்பாட்டு நாணயமாக மாற்றப்படுகின்றன.

**7. சொத்துக்களும் அவற்றின் பெறுமான அடிப்படையும்**

பணம், வங்கி மீதி மற்றும் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகத்தினது சாதாரண செயற்பாட்டு வட்டம் அல்லது அறிவிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் எது குறுகியதாக இருக்கிறதோ அக்காலப்பகுதியின்போது பணமாக எதிர்பார்க்கப்படுகின்றவைகள் ஆகியன நிதி நிலைக் கூற்றில் நடப்புச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களாகும். நடப்புச் சொத்துக்கள் அல்லாத சொத்துக்கள் அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கப்பால் வைத்திருக்க கூட்டுத்தாபனம் எண்ணியுள்ளவைகளாகும்.

### 7.1 ஆதனம், வலுத் தொகுதி, உபகரணம்

ஆதனம், வலுத் தொகுதி, உபகரணம் ஆகியன குறைவாகச் சேர்ந்த தேய்மானச் செலவு மற்றும் ஏதேனும் ஒன்றுசேர்ந்த சேத இழப்பு என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதனம், வலுத் தொகுதி, உபகரணம் ஆகிய பொருட்களுக்கான இடைமாற்றுத் திகதியில் கருதப்பட்ட செலவாக நியாயமான பெறுமதியைப் பயன்படுத்த SLFRS யின் SLFRS 01 முதலாவது கால ஏற்றுக்கொள்ளலின் விருப்பு விதிவிலக்கினைப் பிரயோகிப்பதனை கூட்டுத்தாபனம் தெரிவுசெய்துள்ளது.

ஆதனம், வலுத் தொகுதி, உபகரணம் ஆகியவற்றினது ஒரு பொருளின் செலவானது அதன் கொள்வனவு விலை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பாவனைக்காக செயற்படும் நிலைக்குக் கொண்டுவரும்போது ஏற்படும் நேரடிச் செலவுகள் ஆகியனவற்றைக் கொண்டிருக்கும்.
ஆதனம், வலுத் தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் ஒரு பொருளை அகற்றுவதனால் ஏற்படும் இலாபங்களும் இழப்புக்களும் அகற்றுவதனால் ஏற்படும் வருமானங்கள் மற்றும் ஆதனம், வலுத் தொகுதி, உபகரணம் ஆகியனவற்றைக் கொண்டுசெல்லுகையில் ஏற்படும் தொகை என்பவற்றுக்கிடையில் வேறுபட்டதாகத் தீர்மானிக்கப்படுகின்றன; அத்தோடு, விரிவான வருமானக் கூற்றிலுள்ள ஏனைய வருமானத்தின் கீழ் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 7.2. தேய்மானம்

தேய்மானமானது ஒரு சொத்தின் செலவான தேய்மானமடையக்கூடிய தொகை, அல்லது செலவுக்குப் பிரதியீடான ஏனைய தொகை, அதன் மீதமுள்ள பெறுமதியைக் கழித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்றது. சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நுகரப்படும் என எதிர்பார்க்கப்பட்ட விதத்தினை இது மிக நெருக்கமாகப் பிரதிபலிப்பதனால், ஆதனம், வலுத் தொகுதி, உபகரணம் ஆகிய ஒரு பொருளின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட் காலத்திற்கெதிராக நேரான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் தேய்மானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

நடப்பு, ஒப்பீட்டுக் காலப்பகுதிகளுக்கான தேய்மானத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் வீதங்கள் என்பன பின்வருமாறு:

| **சொத்து வகுதி** | **பயனுள்ள ஆயுள் (வருடங்கள்)** | **தேய்மான வீதம் (%)** |
|---|---|---|
| கட்டிடம் | 20 வருடங்கள் | 5% |
| இயந்திரத் தொகுதி | 06 வருடங்கள் 08 மாதங்கள் | 15% |
| நீர் விநியோக உபகரணங்கள் | 06 வருடங்கள் 08 மாதங்கள் | 15% |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 06 வருடங்கள் 08 மாதங்கள் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் | 20% |
| கருவிகளும் உபகரணங்களும் | 03 வருடங்கள் | 33.33% |

சொத்தானது விற்பனைக்காக வைக்கப்பட்டதாக வகைப்படுத்தப்பட்டுள்ள திகதி மற்றும் சொத்து அங்கீகரிக்கப்படாத திகதி ஆகியவற்றின் ஆரம்பத்தில் சொத்து ஒன்றின் தேய்மானம் முடிவடைந்து பாவனைக்காக இருக்கின்போது ஒரு சொத்தின் தேய்மானம் ஆரம்பிக்கின்றது.

**7.3. நடைபெற்றுவரும் மூலதனப் பணி**

அறிக்கையிடப்படும் திகதியில் பூர்த்திசெய்யப்படாத வருடத்தில் ஏற்பட்ட மூலதனச் செலவுகள் நடைபெற்றுவரும் மூலதனப் பணியாகக் காட்டப்பட்டுள்ள அதேவேளை, குறித்த ஆண்டில் முடிவடைந்து பயன்படுத்தப்படும் மூலதனச் சொத்துக்கள் ஆதனம், வலுத் தொகுதி, உபகரணத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

**8. நிதிச் சொத்துக்கள்**

கூட்டுத்தாபனம் தனது நிதிச் சொத்துக்களைப் பின்வரும் வகுதிகளாக வகைப்படுத்துகின்றது; இலாபம் அல்லது நட்டம், கடன்களும் பெறுகைகளும், விற்பனைக்காக இருப்பவைகள், முதிர்ச்சிக்காக வைத்திருப்பவைகள் ஆகியவற்றினூடான நியாயமான பெறுமதி. நிதிச் சொத்துக்கள் பெறப்பட்ட நோக்கத்திலேயே வகைப்படுத்தல் தங்கியுள்ளது. முகாமைத்துவம் தனது நிதிச் சொத்துக்கள் பற்றிய வகைப்படுத்தலை ஆரம்ப அங்கீகாரத்திலே தீர்மானிக்கின்றது. அறிக்கையிடும் காலப்பகுதியின்போதும் அறிக்கையிடும் திகதியிலும் இலாபம் அல்லது நட்டம், கடன்களும் பெறுகைகளும், விற்பனைக்காக இருப்பவைகள், முதிர்ச்சிக்காக வைத்திருப்பவைகள் ஆகியவற்றினூடான நியாயமான பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை. அனைத்து நிதிச் சொத்துக்களும் ஆரம்பமாக நியாயமான பெறுமதி மற்றும் கொடுக்கல்வாங்கல் செலவு ஆகியவற்றிலே அங்கீகரிக்கப்படுகின்றன.

**9. பொருட் பட்டியல்கள்**

குறைவான செலவு, தேறிய சாத்தியமான பெறுமதி ஆகியவற்றிலேயே பொருட் பட்டியல்கள் அளவிடப்படுகின்றன. பொருட் பட்டியல்களைக் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவு, உற்பத்தி அல்லது மாற்றீட்டுச் செலவு மற்றும் அவற்றை தற்போதுள்ள இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருகையில் ஏற்பட்ட ஏனைய செலவுகள் ஆகியன பொருட் பட்டியல் செலவில் உள்ளடங்கும்.

**10. வர்த்தகப் பெறுகைகள்**

பணத்தை அல்லது ஏனைய நிதிச் சொத்தினை பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரித்தினை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கின்றபோதும் கொண்டிருந்தால் மாத்திரம் வர்த்தகப் பெறுகைகளை தனது நிதி நிலைக் கூற்றில் நிதிச் சொத்துக்களாக அங்கீகரிக்கின்றது.

**11. பணமும் பணத்திற்குச் சமனானவைகளும்**

கையிலுள்ள பணம், கேள்வி வைப்பீடுகள், குறுங்கால அதிக திரவ முதலீடுகள் ஆகியன பணம் மற்றும் பணத்திற்குச் சமனானவைகளாக வரையறுக்கப்படுகின்றன. பணப் பாய்ச்சல் கூற்றுக்காக, கையிருப்பிலுள்ள பணம், வங்கிகளிலுள்ள வைப்புக்கள், தேறிய நிலுவை வங்கி மேலதிகக் கடன்கள் ஆகியவற்றை பணம் மற்றும் பணத்திற்குச் சமனானவைகள் கொண்டுள்ளன.

**12. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

கோருகின்றபோது அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த நிலுவையாகவுள்ளவைகள் நிதி நிலைக் கூற்றில் நடப்புப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். நடப்பிலல்லாத பொறுப்புக்கள் அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய மீதிகளாகும். அறியப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக கணக்கிடப்பட்டுள்ளன.

கடந்தகால நிகழ்வொன்று காரணமாக, கூட்டுத்தாபனம் நம்பத்தகுந்தமுறையில் மதிப்பிட முடியுமான தற்போதைய சட்ட அல்லது பயனுள்ள கடப்பாட்டினைக் கொண்டிருக்குமானால் ஏற்பாடு ஒன்று அங்கீகரிக்கப்படும்; அத்தோடு, அநேகமாக பொருளாதார அனுகூல வெளிப்பாய்ச்சல் கடப்பாட்டினைத் தீர்க்கத் தேவைப்படும்.

**13. பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்கள்**

நிரந்தர சொத்துக்களில் நிதியிடல் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துத் தொகைகளும் திரட்டிய நிதிகளாகும்.

**14. இரவல்கள்**

ஏற்பட்ட தேறிய கொடுக்கல்வாங்கல் செலவுகளான நியாயமான பெறுமதியிலேயே இரவல்கள் ஆரம்பமாக அங்கீகரிக்கப்படுகின்றன. இரவல்கள் அதனைத்தொடர்ந்து மீளச் செலுத்தப்பட்ட செலவாக மேற்கொள்ளப்படுகின்றன.

**15. ஊழியர் அனுகூலங்கள்**

**வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டம்**

தகுதிவாய்ந்த அனைத்து ஊழியர்களுக்காகவும் 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டம் ஒன்றை கூட்டுத்தாபனம் பின்பற்றியுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் 19; ஊழியர் அனுகூலங்களில் விபரிக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட அலகு மதிப்பு முறையினைப் பயன்படுத்தி வரையறுக்கப்பட்ட அனுகூலக் கடப்பாட்டை கம்பனி வருடாந்தம் கணிக்கின்றது.

**16. வருமானத்தை அங்கீகரித்தல்**

பொருளாதார அனுகூலங்கள் கூட்டுத்தாபனத்திற்கு அநேகமாகச் செல்லக்கூடியவாறு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது; அத்துடன், கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவது கவனத்தில் கொள்ளப்படாமல் வருமானத்தை நம்பத்தகுந்தமுறையில் அளவிடமுடியும்.

**17. வருமானச் செலவினை அங்கீகரித்தல்**

ஏற்பட்ட செலவு, குறித்த வருமானப் பொருட்களினால் கிடைத்த பணம் ஆகியவற்றுக்கிடையிலான நேரடித் தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு விரிவான வருமானக் கூற்றிலே செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தை நடாத்துதல், மூலதனச் சொத்துக்களை வினைத்திறனுடன் பேணுதல் ஆகியவற்றின்போது ஏற்பட்ட செலவு வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டமாக வரக்கூடிய வருமானமாக அறவிடப்பட்டுள்ளது.

**18. வரிச் செலவு**

நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியன வருமான வரிச் செலவில் உள்ளடங்கும்.

**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தானம்**
**நிதி நிலைமை கூற்று**
**2014 டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறு**

| | 31.12.2014 | 31.12.2013 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | ரூ. சதம் | ரூ சதம். |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணம் | 166,665,141.88 | 155,081,533.27 |
| செயற்பாட்டிலுள்ள பணி | 87,101,726.50 | 71,492,032.38 |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | | |
| ஊழியர்குழாம் கடன்கள் | 10,027,082.56 | 7,555,483.69 |
| பிற்போட்ட வரி | 6,334,189.19 | 9,876,643.19 |
| | 270,128,140.13 | 244,005,692.53 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | |
| பொருள்விபரப் பட்டியல்கள் | 130,583,741.83 | 144,256,841.12 |
| இடைநிற் கையிருப்பு | - | 2,869,330.42 |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | | |
| ஊழியர்குழாம் கடன்கள் | 7,361,199.87 | 10,404,303.21 |
| தங்கக் கையிருப்புகள் | 3,912,464.55 | 5,561,695.00 |
| விடுமிகு கணக்கு | 2,500,000.00 | 3,874,335.00 |
| வதியாதார் வெளிநாட்டு நாணயக்கணக்கு | 738,617.09 | 715,192.62 |
| நானாவித வைப்புகள் | 1,131,002.00 | 3,397,502.00 |
| நிலையான வைப்புகளில் குறுங்கால முதலீடுகள் | 75,168,240.02 | 71,577,603.50 |
| வர்த்தகக் கடனாளிகள் | 47,639,250.95 | 86,767,038.00 |
| முன்கொடுப்பனவுகளும் முற்பனங்களும் | 9,737,553.43 | 11,976,280.28 |
| காசு, காசு இணைமாற்றுகள் | 178,148,339.93 | 38,443,990.32 |
| | 456,920,409.67 | 379,844,111.47 |
| **மொத்த சொத்துகள்** | 727,048,549.80 | 623,849,804.00 |
| **நிதிகள், பொறுப்புகள்** | | |
| **பங்களிப்புகள்** | | |
| சந்தாசெலுத்தப்பட்ட மூலதனம் | 5,000,000.00 | 5,000,000.00 |
| | 5,000,000.00 | 5,000,000.00 |
| **வெளிப் பங்களிப்பு** | | |
| பொதுத் திறைசேரி | 338,038,210.00 | 238,038,210.00 |
| W.H.O. | 3,994,341.00 | 3,994,341.00 |
| ஆயுர்வேத பரிசோதனை நிறுவனம் | 761,274.00 | 761,274.00 |
| | 342,793,825.00 | 242,793,825.00 |
| **கையிருப்புகள்** | | |
| மூலதனக் கையிருப்பு | 1,923,741.00 | 1,923,741.00 |
| மீள்மதிப்புக் கையிருப்பு | 3,873,559.55 | 5,522,790.00 |
| வெளிநாட்டு செலாவணி இணக்கக் கையிருப்பு | 19,523.00 | 19,523.00 |
| முன்னைய ஆண்டு சரிப்படுத்தல் (பொதிக்கேற்ப) | 38,613,358.30 | 38,613,358.47 |
| ஏனைய முற்றுமுழுதான வருமான கையிருப்புகள் | - | 2,751,742.08 |
| நிறுத்திவைக்கப்பட்டுள்ள சம்பாத்தியங்கள் | 193,492,205.00 | 191,546,841.94 |
| | 237,922,386.85 | 240,377,996.49 |
| | 585,716,211.85 | 488,171,821.49 |
| **பொறுப்புக்கள்** | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | |
| ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடுகள் | 5,120,601.00 | 4,193,014.00 |
| வங்கிக் கடன் | 52,000,000.08 | 56,000,000.00 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் | 35,018,906.40 | 25,300,199.27 |
| | 92,139,507.48 | 85,493,213.27 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | |
| வர்த்தகக் கடனாளிகள் | 13,953,955.51 | 12,069,275.00 |
| முற்பனப் பெறுகை | 441,000.00 | 417,585.00 |
| அட்டுறுச் செலவுகள் | 12,602,193.45 | 11,736,530.24 |
| ஒப்பந்தப் பிணை வைப்புகள் | 5,970,978.52 | 2,929,197.00 |
| கொடுப்பனவு வைப்புகள் | 220,216.69 | 185,361.00 |
| செலுத்தவேண்டிய ஊழியர் பிணை வைப்புகள் | 222,813.30 | 212,813.00 |
| வருமான வரி ஏற்பாடுகள் முன்னைய ஆண்டு | 15,781,673.00 | 22,634,008.00 |
| | 49,192,830.47 | 50,184,769.24 |
| **மொத்த நிதிகள் மற்றும் பொறுப்புகள்** | 727,048,549.80 | 623,849,804.00 |

**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தானம்**
**உற்பத்தி செலவுக் கூற்று**
**2014 டிசம்பர் 31ஆம் திகதியன்று நிறைவுற்ற ஆண்டுக்கானது**

| | 2014 | 2013 |
|---|---|---|
| **மூலப்பொருள்கள் நுகர்வு** | ரூ. சதம் | ரூ. சதம் |
| ஆரம்பக் கையிருப்பு | 51,129,741.00 | 68,058,659.00 |
| சேர்க்க: உள்ளூர் கொள்வனவுகள் | 159,964,933.47 | 136,605,366.00 |
| இறக்குமதிக் கொள்வனவுகள் | 147,195.03 | 384,546.00 |
| | 211,241,869.50 | 205,048,571.00 |
| குறைக்க: களஞ்சிய சேதங்கள் | - | - |
| | 211,241,869.50 | 205,048,571.00 |
| குறைக்க: உறுதிமுடித்த கையிருப்பு | 44,883,359.41 | 51,129,741.00 |
| **மூலப்பொருள்கள் நுகர்வு செலவு** | 166,358,510.09 | 153,918,830.00 |
| **பொதியிடல் பொருள்கள் நுகர்வு** | | |
| ஆரம்பக் கையிருப்பு | 10,684,760.00 | 11,357,499.00 |
| சேர்க்க: கொள்வனவுகள் | 23,118,100.75 | 22,242,376.00 |
| | 33,802,860.75 | 33,599,875.00 |
| குறைக்க: உறுதிமுடித்த கையிருப்பு | 7,845,074.58 | 10,684,760.00 |
| **பொதியிடல் பொருள்கள் நுகர்வு செலவு** | 25,957,786.17 | 22,915,115.00 |
| நேரடி ஊழியர் செலவு | 53,290,111.68 | 49,705,875.01 |
| ஆரம்ப எரியூட்டப்பட்ட எண்ணெய் கையிருப்பு | 252,000.00 | 762,190.00 |
| எரியூட்டப்பட்ட எண்ணெய் கொள்வனவு | 15,233,764.92 | 13,571,920.00 |
| குறைக்க: உறுதிமுடித்த எரியூட்டப்பட்ட எண்ணெய் கையிருப் | 969,076.00 | 252,000.00 |
| | 67,806,800.60 | 63,787,985.01 |
| **முதன்மை செலவு** | 260,123,096.86 | 240,621,930.01 |
| **ஆலை மேல் செலவுகள்** | | |
| சேர்க்க: ஆரம்ப முடிக்கப்படாதவை | 9,071,213.00 | 6,251,170.26 |
| மறைமுக செலவுகள் | 39,171,394.44 | 40,843,311.63 |
| குறைக்க: ஆரம்ப முடிக்கப்படாதவை | 12,646,762.39 | 9,071,213.00 |
| | 35,595,845.05 | 38,023,268.89 |
| ஆண்டின் மொத்த உற்பத்தி செலவு முற்றுமுழுதான வருமான கூற்றிட்கு முன்கொண்டு செல்லப்பட்டது | 295,718,941.91 | 278,645,198.90 |

**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தானம்**
**விரிவான வருமான கூற்று**
**2013 டிசம்பர் 31 இல் நிறைவுற்ற ஆண்டிற்கானது**

| | 2014<br>Rs. Cts. | 2013<br>Rs. Cts. |
|---|---|---|
| விற்பனைகள் | 444,941,698.49 | 425,450,179.00 |
| குறைக்க: விற்பனை செலவு | 304,892,030.07 | 265,720,560.15 |
| **மொத்த இலாபம்** | 140,049,668.42 | 159,729,618.85 |
| ஏனைய வருமானம் | 8,621,577.31 | 12,611,164.82 |
| | 148,671,245.73 | 172,340,783.67 |
| குறைக்க: நிருவாகம், நிறுவன செலவுகள் | 82,300,046.44 | 77,822,750.63 |
| விற்பனைகள், விநியோக செலவுகள் | 48,547,895.94 | 49,558,421.16 |
| | 130,847,942.38 | 127,381,171.79 |
| **செயற்பாடுகளில் இருந்து கிடைத்த மிகை** | 17,823,303.35 | 44,959,611.88 |
| நிகர நிதிசார் வருமானம் / (செலவுகள்) | (3,349,279.74) | (2,703,943.46) |
| **வரிக்கு முந்திய நிகர மிகை** | 14,474,023.61 | 42,255,668.42 |
| குறைக்க: வருமான வரி செலவுகள் | 6,505,596.00 | 13,000,187.92 |
| **வரிக்குப் பிந்திய நிகர மிகை** | 7,968,427.61 | 29,255,480.50 |
| **ஏனைய முற்றுமுழுதான வருமானம்** | | |
| வரையறுத்த நன்மைத் திட்டம் உண்மையான பெறுகைகள்/ ( | (6,139,731.80) | (343,088.80) |
| **ஆண்டுக்கான ஏனைய மொத்த வருமானம்** | (6,139,731.80) | (343,088.80) |
| **ஆண்டுக்கான விரிவான மொத்த வருமானம்** | 1,828,695.81 | 28,912,391.70 |

**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தானம்**
**பணப்பாய்வு கூற்று**
**2014 டிசம்பர் 31இல் நிறைவுற்ற ஆண்டுக்கானது**

| | 2014 | 2013 |
|---|---|---|
| | Rs. Cts. | Rs. Cts. |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பணப்பாய்வு** | | |
| வரிவிதிப்புக்கு முன்னர் நிகர இலாபம் | 14,474,023.61 | 42,255,668.42 |
| **சரிப்படுத்தல்கள்** | | |
| ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடுகள் | 927,587.00 | 701,700.00 |
| தேய்வு | 10,010,368.65 | 11,765,787.23 |
| கட்டிட அகற்றல் நட்டம் | - | - |
| நிகர செயற்படா வருமானங்கள் | - | (3,762,925.00) |
| ஊழியர் நன்மை சரிப்படுத்தல்கள் | 4,116,710.33 | 3,301,569.39 |
| முன்னைய ஆண்டு சரிப்படுத்தல்கள் | 49,448.17 | |
| தங்கக் கையிருப்பு மீள்மதிப்பு | - | - |
| | 29,578,137.76 | 54,261,800.04 |
| **தொழிற்பாட்டு மூலதனத்தை மாற்றுவதற்கு முன்னர் இலாபம்** | | |
| (அதிகரிப்பு)/இழப்பு பொருள் விவரப் பட்டியல்கள் | 13,673,099.29 | (2,991,042.89) |
| (அதிகரிப்பு)/இழப்பு இடைநில் பொருள்விவரப் பட்டியல் | 2,869,330.42 | (1,815,777.75) |
| (அதிகரிப்பு)/இழப்பு ஊழியர் கடன்கள் | 571,504.47 | (1,430,773.24) |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 2,238,726.85 | 9,391,998.39 |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 2,266,500.00 | 136,500.00 |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 39,127,787.05 | (19,040,844.00) |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 1,884,680.51 | 9,486,357.00 |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | (0.17) | 1,078,072.87 |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 23,415.00 | 253,585.00 |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 3,041,781.52 | (104,365.00) |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 34,855.69 | (17,800.00) |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 10,000.30 | 6,000.00 |
| (அதிகரிப்பு)/இழப்பு முற்கொடுப்பனவுகள் முற்பணங்கள் | 865,663.21 | 259,852.26 |
| | 96,185,481.90 | 49,473,562.68 |
| குறைக்க: செலுத்திய பணிக்கொடை | (537,735.00) | (1,069,500.00) |
| செலுத்திய வரி | (12,500,000.00) | (2,000,000.00) |
| ***செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்பாய்வு*** | 83,147,746.90 | 46,404,062.68 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்பாய்வு** | | |
| PPE கொள்வனவு | (21,593,977.26) | (5,939,779.07) |
| முன்னெடுக்கப்படும் வேலையில் முதலீடு | (15,609,694.12) | (41,794,268.47) |
| நிலையான வைப்புகளில் முதலீடு | (3,590,636.52) | (4,876,579.15) |
| விடுமிகு கணக்கில் முதலீடு | 1,374,335.00 | (2,642,088.00) |
| வதியாதார் வெளிநாட்டு நாணயக் கணக்கில் முதலீடு | (23,424.47) | (36,436.03) |
| ***முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்பாய்வு*** | (39,443,397.37) | (55,289,150.72) |
| **நிதிசார் நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்பாய்வு** | | |
| திறைசேரியிடமிருந்து கிடைத்த பணம் | 100,000,000.00 | 3,000,000.00 |
| மாணியம்/ ( மீள்கொடுப்பனவுகள் ) வங்கிக் கடன் | (3,999,999.92) | (4,000,000.00) |
| ***நிதிசார் நடவடிக்கைகளில் இருந்து நிகர பணப்பாய்வு*** | 96,000,000.08 | (1,000,000.00) |
| காசு மற்றும் காசு இணைமாற்றுகளில் நிகர அதிகரிப்பு/ (இழப்பு | 139,704,349.61 | (9,885,088.04) |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசு இணைமாற்றுகள் | 38,443,990.32 | 48,329,078.36 |
| வருட இறுதியில் காசு மற்றும் காசு இணைமாற்றுகள் | 178,148,339.93 | 38,443,990.32 |

| | 2014 | 2013 |
|---|---|---|
| | Rs. Cts. | Rs. Cts. |
| மக்கள் வங்கி - கங்கொடவில - A/C No. 97100-182315453 | 41,423,221.77 | 15,116,387.58 |
| மக்கள் வங்கி - கங்கொடவில- A/C No. 97100-272315453 | 23,012,460.76 | 5,519,183.66 |
| இலங்கை வங்கி- நிறுவனக் கிளை- A/C No.00001209 | 112,992,657.40 | 17,448,419.08 |
| சேமிப்புக் கணக்கு | 720,000.00 | 360,000.00 |
| | 178,148,339.93 | 38,443,990.32 |

## 2014 ஆம் ஆண்டுக்கான தேறுமதியில் மாற்றங்கள் தொடர்பான கூற்று

| விபரம் | பங்களிப்பு மூலதனம் (ரூ) | பொதுத் திறைசேரி (ரூ) | உலக சுகாதார தாபனம் (ரூ) | அமைச்சுகளும் அரச நிறுவனங்களும் (ரூ) | மூலதன கையிருப்பு (ரூ) | மீள்மதிப்பு கையிருப்பு (ரூ) | கணணி பொதி மீதான கையிருப்பு (ரூ) | அந்நிய செலாவணி சமப்படுத்தல் கையிருப்பு (ரூ) | இலாப நட்டக் கணக்கு (ரூ) | ஏனைய விரிவான இலாபங்கள் (ரூ) | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31.12.2014 அன்று மீதி | 5,000,000 | 238,038,210 | 3,994,341 | 761,274 | 1,923,741 | 5,522,790 | 38,613,358 | 19,523 | 191,546,842 | 2,751,742 | 488,171,821 |
| ஆண்டின் சரிக்கட்டல்கள் | | 100,000,000 | - | - | - | (1,649,230) | - | | 1,945,363 | (2,751,742) | 97,544,391 |
| 31.12.2014 அன்று மீதி | 5,000,000 | 338,038,210 | 3,994,341 | 761,274 | 1,923,741 | 3,873,560 | 38,613,358 | 19,523 | 193,492,205 | - | 585,716,212 |

## கணக்குகளுக்கான குறிப்புகள்

1. 2014.12.31 அன்று உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் விற்பனையும் ஏனைய கையிருப்பும்

| | | |
|---|---|---|
| 1. | மூலப் பொருள்கள் கையிருப்பு (செலவு) | ரூ.44,883,359.41 |
| 2. | முடிவடைந்த மருந்து கையிருப்பு (செலவு) | ரூ.62,379,108.93 |
| 3. | பொதியிடல் கையிருப்பு (செலவு) | ரூ.7,845,074.58 |
| 4. | முடிவடையாத கையிருப்பு (செலவு) | ரூ. 12,646762.39 |
| 5. | காகிதாதிகள் கையிருப்பு (செலவு) | ரூ. 1,462,368.27 |
| 6. | எரிக்கப்பட்ட எண்ணெய் கையிருப்பு (செலவு) | ரூ. 969,076.00 |
| 7. | இயந்திர உதிரிப்பாகங்கள் கையிருப்பு | ரூ. 271,230.00 |
| 8. | நலனோம்புகை பொருட்கள் | ரூ. 126,762.25 |

2. 2014.12.31 ஆம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணமாக ரூ 550,000.00 ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்ட திட்டங்களுக்கு அமைய கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின் முதலாவது அட்டவணைக்கு ஏற்ப சாதாரண வியாபார நடவடிக்கைகளில் இருந்து கிடைக்கும் இலாபம் மற்றும் வருமானம் 28 வீதத்திற்கு அமைவாக உள்ளது. ஏனைய இலாபங்கள் சாதாரண விகிதத்திற்கு அமைவானதாகும்.

| | 2014 (ரூ.) |
|---|---|
| தற்போதைய வருட இலாபம் | 2,963,142.00 |
| பிற்போட்ட வரி | 3,542,454.00 |
| | 6,505,596.00 |

4. பின்வரும் வழக்குகளின் விளைவுகள் அறிக்கையிட்ட திகதியன்று உள்ளவாறு பூர்த்தியாகாத நிலையில் உள்ளது.

| தரப்பு | பதவி | வழக்கு எண் | நீதிமன்றம் | குற்றச்சாட்டின் வகை |
|---|---|---|---|---|
| திரு. எம்.கே சோமதாச | களஞ்சிய காப்பாளர் | W/P/HCCRMT/78/07 F | உச்ச நீதிமன்றம் | 55வயதில் ஓய்வு |
| திரு. எச்.பி ஜயவர்தன | களஞ்சிய காப்பாளர் | MH/33/1191/2015 | தொழில் நீதிமன்றம் - பன்னிபிடிய | 55வயதில் ஓய்வு |
| திரு.ஆர்.எம் லங்காதிலக | பாதுகாப்பு உத்தியோகத்தர் | HC3755/07 | உயர் நீதிமன்றம் - கொழும்பு | நடமாடும் விற்பனையில் பண மோசடி |
| வரையறுக்கப்பட்ட மெட்ச்மா கொம்ரன் தனியார் நிறுவனம் | வழங்குனர் | ARB/229/2013 & ARB/162/2013 | வர்த்தக உயர்நீதிமன்றம் | நீராவி கொதிகலனுக்கான கொடுப்பனவு |

5. இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம் மூலப்பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இறக்குமதிக்கு மக்கள் வங்கியின் கங்கொடவில கிளையுடன் கடன் சான்றுகளின் ஊடாக உடன்படிக்கைகளைச் செய்துள்ளது.
6. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தங்கக் கையிருப்பு 2014.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு ரூ. 3,912,464.55 என அப்போதைய விகிதத்தின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் சர்வதேசக் கிளையிள் உள்ள மதிப்பீடு செய்பவரினால் மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட இலாபம் கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட இலாபத்தைப் போன்று குறிக்கப்பட்டுள்ளது.
7. விற்பனை வருமானங்கள் கழிவுகள் கழிக்கப்பட்டதன் பின்னரான நிகர விற்பனைகளாகும்.
8. 2014.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு களஞ்சிய எண் 01/02 மற்றும் 11 இல் வைக்கப்பட்டுள்ள பின்வரும் பொருள்கள் தொல்பொருள் பெறுமானங்களையுடையதும் ஒரு இயற்கையான பொருள் களஞ்சியத்தின் அவசியப்பாட்டையுடைய விலைமதிக்கமுடியாதவையாகும். இப்பொருள்கள் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு அலகுகளாக காட்டப்பட்டுள்ளதில் ஒழுங்குபடுத்தப்படவில்லை.

| | |
|---|---|
| முத்து சிப்பிகள் (கி.கி) | 86.35 |
| மான் கொம்புகள் (கி.கி) | 52.10 |
| கஸ்த்தூரி மாத்திரைகள் | 23.00 |
| தூய பளிங்குக்கல் (கி.கி) | 4.46 |
| பழுப்பு வண்ணப்பட்டை | 3.00 |
| வெள்ளி எ∴கு (கி.கி) | 18.50 |
| வெள்ளை காரீயம் (கி.கி) | 16.80 |
| செம்புத் தட்டுகள் (கி.கி) | 2.50 |

9. சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான பல்வேறு மூலிகைப் பண்ணைகள் தற்காலிகமாக கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அவற்றின் சொத்துக்கள் தற்காலிகமாக கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன், கூட்டுத்தாபனம் தற்போது மூலிகைப் பண்ணை கருத்திட்டங்களை விரிவுபடுத்திவருகிறது. அவற்றின் உற்பத்திகள் கூட்டுத்தாபனத்தில் மருந்து உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டுவருகிறது.
10. விநியோகப் பிரிவு முகாமையாளர் திரு. எஸ்.எல் கெகிரிதெனியவினால் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளியிடப்பட்டமையால், அவ்வலுவலர்க்கு ரூ.1,587,000.00 தொகை செலுத்தப்பட்டதோடு, எஞ்சிய தொகையான ரூ.793,500.00 கூட்டுத்தாபனத்திற்கு மீளளிக்கப்பட்டது.
11. கூட்டுத்தாபனத்தில் மருந்துப்பொருள் உற்பத்திக்காக மாணியமாக நீதிமன்றத்தினால் அன்பளிப்புச்செய்யப்பட்ட மூலப்பொருள்கள் மூலப்பொருள்கள் கொள்வனவாகவும் குறித்த ஆண்டில் ஆகக் குறைந்த கேள்வி விலையில் கிடைத்த பலவகை வருமானமாகவும் கணக்கிடப்பட்டன
12. சுதேச மருத்துவ அமைச்சுக்கு சொந்தமான LC 9184 இலக்க லொறி கூட்டுத்தாபனத்தில் மருந்து விநியோகத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.